# பொதுக்காலம் 14ஆம் வாரம் - ஞாயிறு

# இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

“என் அருள் உனக்குப் போதும்” என்று நம்மை வரங்களால் நிரப்ப அழைப்பு விடுக்கும் பொதுக்காலம் 14ஆம் ஞாயிறு திருப்பலிக்கு அழைக்கப்பட்டிருக்கும் அன்புள்ளங்களை அன்போடு வரவேற்கிறோம்.

“உன் வாழ்நாள்களை நலன்களால் நிறைவுறச் செய்கின்றார்” என்று நம்மை ஆசீர்வதிக்கும் இறைவனை அனுபவிக்கவும், உணர்ந்து நம்பிக்கையில் ஆழப்படவும் இன்று அழைக்கப்பட்டிருக்கிறோம். அனைத்து நலன்களால் ஆசீர்வதிக்கப்படும்போது மனம் இறைவனை மறந்து இறுமாப்பு அடைகிறது. இறுமாப்பினை அழிக்கவே சிறு குறைகளை அவ்வப்போது இறைவன் தருகின்றார். குறைகளை நிறைவாக்க வலிமையையும் தருகின்றார்.

புனித பவுல் தனக்கு ஏற்பட்ட துன்பங்களிலும் அவமானங்களிலும் மனம் தளராது நிலைத்து நின்றதைக் காண்கிறோம். “வலுவின்மையிலும் இகழ்ச்சியிலும் இடரிலும் இன்னலிலும் நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு நான் அகமகிழ்கிறேன் என்கிறார் பவுல். நாமும் இறைவன் கரங்களைப் பற்றிக் கொண்டு இவ்வாழ்வை எதிர் நோக்குவோம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில், இறைவன் இயேசு செய்த அற்புதங்களையும், ஞானத்தையும் கண்ணால் கண்டும், அனுபவித்தும் இருந்த மக்கள் அவரது பிறப்பை முன்னிட்டு, பிறந்த இடத்தை முன்னிட்டு அவரை ஏற்க மறுக்கின்றனர்.

இன்றைய சமூகத்திலும், பல்வேறு காரணங்களால், சிலரின் சூழ்ச்சிகளால், நல்லது செய்ய எண்ணுவோர் நசுக்கப்படுகின்றனர். பொது நலனில் அக்கறை கொண்டு உழைப்பவர்கள் கொல்லவும் படுகின்றனர். “மனிதர் முகத்தைப் பார்க்கின்றனர்; கடவுளோ அகத்தைப் பார்க்கின்றார்” என்ற இறை வசனத்தைக் கருத்தில் கொள்வோம். பிறரின் எதிர்மறையான சொற்களையும் எண்ணங்களையும் மனதிற் கொள்ளாமல், நலம் பயக்கும் செயல்களை செய்ய முன்வருவோம்.

“நற்செயல்கள் உன் குடும்பத்திற்காக செய்யப்படும் போது

ஒரு தலைமுறை உன்னை நன்றியோடு நினைவுகூரும்.

உன் நற்செயல்கள் உன் சமூகத்திற்காகச் செய்யப்படும் போது

ஓராயிரம் தலைமுறை உன்னை நினைத்து வாழ்த்தும்.”

வாழ்த்துக்கள் வந்தடையும் முன் வருத்தமடையச் செய்யும் வசவுகள் வந்து தான் தீரும். அவற்றை இறை நம்பிக்கையோடு எதிர் கொள்வோம். பிறர் நம்பிக்கையைத் தூண்டுவோம் என்ற சிந்தனைகளோடு இப்பலியில் இணைவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. “என் அருள் உனக்குப் போதும்” என்று அழைத்தவரே எம் இறைவா!

இத்திருச்சபையை வழிநடத்த நீர் அழைத்த எம் திருத்தந்தையின் மீது அருளைப் பொழிந்து, உடல், உள்ள நலன்களைத் தந்திடவும், திருச்சபைப் பணியாளர்களை உம் நம்பிக்கையால் நிரப்பி உற்ற துணையாக இருந்து வழிநடத்திட வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

2. வலுவின்மையை உமது வல்லமையால் நிரப்புபவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்கள், பொறுப்பில் இருக்கும் அதிகாரிகள், தங்கள் வலுவின்மையால் நாட்டினை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்ல இயலாத நிலையை மாற்றவும், உமது வல்லமையால் அவர்களின் வலுவின்மையை மாற்றி நற்செயல்களைச் செய்திட வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

3. நம்பிக்கையில் எம்மை நிலைக்கச் செய்பவரே எம் இறைவா!

உமது வல்லமையில் நம்பிக்கை கொண்டு எமது அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்களை உமது துணையுடன் வெற்றி கண்டிட வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

4. வல்ல செயல்களால் எம்மை வாழ்விப்பவரே எம் இறைவா!

கிறிஸ்தவ நம்பிக்கையில் தளர்வுற்று, மூட நம்பிக்கைகளில் மூழ்கி கிடக்கும் மக்களை, உமது பாதைக்கு அழைக்கும் வல்லமையைத் தந்திட வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com